22nd September 1956]

Sri K. T. RAJU : கனம் சபாநாயகர் அவர்களே, தண்டத் தீர்வை முதலில் போட்டாலும் அதை மறுபடியும் ரத்து செய்யப்படும் என்று கனம் மந்திரி அவர்கள் முதல் கேள்வியில் பதில் சொன்னார். சுமார் 750 விண்ணப்பங்கள் இது வரையிலும் வந்திருக்கலாம். அவைகளில் நான்கு விண்ணப்பங்களுக்குக்கூட ரத்து பண்ணியதாக இது வரைக்கும் உத்தரவு வரவில்லை. நிலைமை இப்படி இருக்கும்போது விவசாயிகளுக்கு முதலில் தண்டத் தீர்வையைப் போட்டுவிட்டு பிறபாடு அதை ரத்து செய்வானேன் என்று கேட்கிறேன். அதற்குப்பதிலாக அவர்களுக்கு முதலிலேயே தண்டத் தீர்வையை போடாமல் இருந்தால் நல்லது அல்லவா ? இப்படிப் பட்ட கஷ்டங்களை விவசாயிகளுக்கு அளிக்கவேண்டிய அவசியம் என்ன ? ஆரம்பத்திலேயே சர்க்கார் இதைப்பற்றி ஒரு முடிவு செய்து அதற்குத் தக்கபடி ஒரு உத்தரவு போடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : தண்டத் தீர்வை விஷயமாக அதை ரத்து செய்யவேண்டுமானால் அதற்கு மனுச் செய்துகொள்ளவேண்டும் என்று ஏற்கெனவே உத்தரவு இருந்தது. இப்பொழுது அப்படி இல்லை. மனு இல்லாமலேயே அதாவது உத்யோகஸ்தர்கள் suo motu அவர்களாகவே அதைப்பற்றி பரிசீலனை செய்து ரத்து செய்யவேண்டுமென்று ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகவே எவ்வளவுக் கெவ்வளவு விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களை நிவர்த்தி செய்து வைக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு சர்க்கார் வழி செய்துகொண்டு தான் வருகிறார்கள்.

*** 173 *Q.*—Sri K. R. NALLASIVAM (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to go into the question of water levy on the ayacutdars of the Lower Bhavani Project area in Coimbatore district ?**

The Hon. Sri M. A. MANICKAVELU : The hon. Member presumably refers to levy of water-cess. The levy of water-cess under this Project is governed by rules already issued in this behalf. Some petitions have been received by Government urging revision of the rates prescribed in the rules. They are under consideration.

Sri K. R. NALLASIVAM : அணை திட்டத்தில் இருக்கக்கூடிய நிலங்களுக்கு சொல்ப தண்ணீர்தான் விடுகிறார்கள். அவர்களுக்கு அதிகப் படியான தீர்வை விதிக்கிறார்கள் ஆனால் அதிகப்படியாக தண்ணீர்விடக் கூடிய பிரதேசங்களுக்கு இவ்வளவு அதிகமாக தீர்வை விதிப்பதாகத் தெரியவில்லை ; 18 தடவை தண்ணீர் விடக்கூடிய இந்த பாசனத்துக்கு அதிகப்படியாக தீர்வை விதிக்கிறார்கள். ஆனால் வருஷத்தில் சுமார் 300 நாட்கள் தண்ணீர் விடக்கூடிய பிரதேசங்களுக்கு அப்படிப்பட்ட தீர்வை விதிப்பதில்லை, அதனால் தண்ணீர் விடுவதைப் பொறுத்து தீர்வை விதிக்கிறார்களா அல்லது ப்ராஜெக்ட்டின் செலவைப் பொறுத்து தீர்வை விதிக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதிகப்படியாக தண்ணீர் விடக்கூடிய இடத்திற்கு அதிகப்படியாக தீர்வையும் விதிப்பதாகத் தெரிய வருகிறது. எந்த அடிப்படையில் தீர்வை விதிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : நெல், கரும்பு மற்ற தான்யங்கள் என்பதைப் பொறுத்துத்தான் இப்பொழுது தீர்வை விதிக்கப் படுகிறது. இதைப்பற்றி பரிசீலனை செய்ய பல மனுக்கள் வந்திருக்கின்றன. அவைகளை பைசல் செய்வது என்பது கஷ்டமாக இருக்கிறது. அதில் பல தொந்தரவுகள் ஏற்படுகின்றன. அதை மாற்றி யமைக்கவேண்டும் என்று யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது சாகுபடியை மூன்று இனங்களாக பிரித்து வைத்திருக்கிறார்கள். ஒன்று நெல் சாகுபடி,

[22nd September 1956

இரண்டாவது தோட்டப் பயிர், மூன்ருவது பருத்தி முதலிய மற்ற தானியங்கள் என்று இப்படி பிரித்து அந்தந்த வகைகளுக்குத் தக்கவாறு தீர்வை விதிக்கவேண்டும் என்று பரிசீலனை செய்துகொண்டிருக்கிருர்கள்.

Sri K. T. RAJU : இந்தப் பிரதேசத்தில் விதிக்கப்படும் தண்ணீர் தீர்வை மற்ற பிரதேசங்களில் விதிக்கப்படும் தண்ணீர் தீர்வையைவிட அதிகமாக இருக்கிறது. ஆகையினுல்தான் விவசாயிகள் தீர்வையை ரத்து செய்யவேண்டும் என்று சொல்லுகிருர்கள். தண்ணீர் எடுத்துக்கொண்டாலும் எடுத்துக்கொள்ளாவிட்டாலும் தீர்வை விதித்து வசூலித்து வருகிருர்கள். இந்த முறையை மாற்றியமைக்கவேண்டும். தண்ணீர் எடுத்துக்கொள்ளாவிட்டாலும் தீர்வைபோட்டு வசூலிப்பது என்பது நியாயமல்ல. இதற்கு முதலில் பதில் சொல்லவேண்டும். சில இடங்களில் தண்ணீர் கொடுக்காமல் தீர்வையை வசூலிப்பதாக தெரிய வருகிறது. இது நியாயமா என்பதையும் தெரிவிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : தண்ணீர் எடுத்துக் கொண்டாலும் எடுத்துக்கொள்ளாவிட்டாலும் தீர்வையைக்கட்டவேண்டியது தான். தண்ணீர் எடுத்துக்கொள்ளவில்லை யென்ருல் அவர்கள் சோம்பேரிகளாக இருப்பார்கள். இவர்கள் சோம்பேரிகளாக இல்லாமல் இருந்தால் அவர்கள் தண்ணீரை எடுத்துக்கொள்ளாமல் இருக்கமாட்டார்கள். சோம்பேரிகளும் உழைத்துப் பிழைக்கவேண்டும் என்பதற்காகத்தான் தண்ணீர் எடுத்துக்கொண்டாலும் எடுத்துக்கொள்ளாவிட்டாலும் அவர்களும் தீர்வை செலுத்தவேண்டும் என்று விதி விதித்திருக்கிருர்கள்.

Sri K. T. RAJU : லோயர் பவானி ப்ராஜெக்ட் ஏரியாவில் சோம்பேரிகள் என்பது கிடையாது. அவர்கள் தண்ணீர் இல்லையே என்று தான் இருக்கிருர்கள். எப்பொழுது தண்ணீர் வரும், என்று விவசாயம் செய்யலாம் என்று தான் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிருர்கள். இதனுல் இங்கு தண்ணீர் கொடுக்காமல் தீர்வையை விதிக்கக்கூடாது என்ற உத்தரவைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : ஒரு ரயத்தும் அங்கு சோம்பேரிகளாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்தத் தீர்வையை போட்டிருக்கிருேம். அப்படிப்போட்டால்தான் அங்கு சோம்பேரித்தனம் ஏற்படாது.

Sri P. VENKATESHA SHOLAGAR : தண்ணீர் தீர்வை விதிக்கும் சம்பந்தமாக கனம் மந்திரி அவர்கள் சில விதிகள் இருக்கின்றன என்று சொன்னுர். அந்த விதிகள் லோயர் பவானி பிரதேசம் சம்பந்தப்பட்ட மட்டிலா அல்லது அப்படிப்பட்ட விதி மாகாணம் பூராவிலும் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்த விதிகள் எல்லாம் லோயர் பவானி பிரதேசம் சம்பந்தப்பட்டவைகள் தான்.

Sri K. R. NALLASIVAM : ஒரு ஒழுங்குப் பிரச்னை. லோயர் பவானி பிரதேசத்திலுள்ள ரயத்துக்கள் உழைத்துப் பிழைக்கக் கூடியவர்கள். அவர்கள் சோம்பேரிகள் அல்ல. அங்குள்ள எல்லோரும் உழைத்துக் கொண்டுதானிருக்கிருர்கள். நாளில் 24 மணி நேரமும் அங்குள்ள விவசாயிகள் உழைத்துக்கொண்டிருக்கக்கூடியவர்கள்தான். அப்படி இருக்கும்போது அவர்களை சோம்பேரிகள் என்று சொல்வது நியாயமா என்பதை அறிய விரும்புகிறேன். கனம் சபாநாயகர் அவர்கள் இதற்கு ஒரு ரூலிங் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : This is not a point of order.

22nd September 1956]

Sri P. RAMAMURTHI : தண்ணீர் எடுத்துக்கொள்ளாமல் இருந்தாலும் தண்ணீர் வரி விதிக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். சோம்பேறிகள் தண்ணீர் கொடுத்தாலும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்றும் சொன்னார். ஆனால் சர்க்காரே தண்ணீர் கொடுக்காமல் இருந்தால் இதில் யார் சோம்பேறிகள் என்பதை அறிய விரும்புகிறேன். இதற்கும் சர்க்கார் பதில் சொல்லவேண்டும்.

The Hon. Sri M. A. MANICKAVELU : இதைப்பற்றி தனி கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.

* 174 *Q.*—Sri K. T. RAJU (on behalf of Sri N. K. Palanisamy) : Will the Hon. the Minister for Revenue be pleased to state— 9–50 a.m.

(*a*) whether this Government have constituted any committee during 1956 to enquire into the grievances of the Lower Bhavani ayacutdars of Coimbatore district;

(*b*) whether the Committee has made any recommendations to the Government; and

(*c*) if so, the details of the recommendations?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

Sri K. R. NALLASIVAM : 1956-ம் வருஷம் சத்தியமங்கலத்தில் நடந்த மகாநாட்டுக்கு கனம் மாணிக்கவேலு அவர்கள் வந்திருந்தார்கள். அந்த மகாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அதைப் பெரும்பாலும் சர்க்கார் அமைத்த கமிட்டியாகவே எண்ணினார்கள். அதற்குப் பின்னால் ஸ்ரீ ரங்கசாமி அங்கே சுற்றுப்பிரயாணம் செய்தார். ஸ்ரீ கக்கன் சுற்றுப் பிரயாணம் செய்தார். நிதி அமைச்சர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் சீக்கிரமே ஒரு மகாநாட்டை மறுபடியும் கூட்டி உடனடியாகச் சில உத்திரவுகளைப் பிறப்பிப்பதாகச் சொன்னார்கள். அவைகள் எல்லாம் எந்த நிலைமையில் இருக்கின்றன என்று கனம் மந்திரி அவர்கள் சொல்வாரா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் ஸ்ரீ நல்லசிவம்கூட இவ்விஷயத்தில் அனேக மனுக்களை அனுப்பியும், இருக்கிறார்கள். அடிக்கடி கிளர்ச்சியும் செய்துவருகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியும். அவ்விஷயம் விசாரணையில் இருந்துவருகிறது. கூடிய சீக்கிரம் சர்க்கார் ஒரு முடிவுக்கு வரும்.

Sri P. G. MANICKAM : லோயர் பவானி பிரதேசத்தில் 1,464 ஹரிஜனங்கள் தங்கள் வீடுகளை இழந்திருக்கிறார்கள். இதுவரையில் அவர்களுக்கு 600 வீடுகள் தான் கட்டித்தரப்பட்டிருக்கிறது. இன்னும் 800 வீடுகள் கட்டப்படவேண்டியிருக்கின்றன. வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட எண்பதாயிரம் ரூபாய் சர்க்கார் வசம் இருக்கிறது. லோயர் பவானி வேலை முடிவு அடையும் தருவாயில் இருப்பதால் உடனடியாக இந்தப் பணமும் லாப்ஸ் ஆகாமல் வீடு இழந்த மற்ற ஹரிஜனங்களுக்கு எல்லாம் வீடுகளைத் துரிதமாகக் கட்டிக்கொடுக்க கனம் மந்திரி அவர்கள் முயற்சி எடுப்பார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : வீட்டு விஷயம் தனி. கனம் அங்கத்தினர் இதைப்பற்றி பிரத்யேகமாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.